லக்கி பிளாஸா
* பேபி ஐயிட்டம்
* மின்சார மனையியற் பொருட்கள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்களை
நிதான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
67, 68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

தரத்தில் சிறந்த
நவீனமான பொருட்களை
நிதான விலையில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய
இடம்
லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 11 (14-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 307

# வல்வை வீடுகளில் புகுந்த சிப்பாய்கள் விரட்டப்பட்டனர்

## புலிகள் - படைகள் மூன்றும் நாளாக கடுஞ் சமர்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, நவ.14

வல்வெட்டித்துறையில், வைரவர் கோவிலடியில் மக்கள் விட்டுச் சென்ற வீடுகளில் புகுந்திருந்த சிப்பாய்கள் அனைவரையும், தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுக் கடுந்தாக்குதல் நடத்தி விரட்டினர்.

இதே வேளை அரசாங்க படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை மூன்றுவது நாளாகக் கடுஞ் சமர் நடந்தது.

முப்படைகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இருமுனைப் போராட்டத்தில் நேற்று முழுவதும் ஈடுபட்டிருந்தனர்.

வல்வை இராணுவ முகாமுக்கும் தொண்டமானாறு முகாமுக்கும் இடையில் உள்ள வைரவர் கோயிலடியில் குடியிருப்பாளர்களால் கைவிடப்பட்ட வீடுகளினுள் ஸ்ரீலங்கா சிப்பாய்கள் புகுந்திருந்தனர்.

நேற்றுக்காலையில் மீண்டும் தாக்குதல்கள் ஆரம்பமாகின.

ஒரு வேவு விமானத்துடன் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலையும் ஷெல் தாக்குதலையும் நடத்தின.

நேற்றைய மோதலில் ஸ்ரீலங்காப் படையினருக்கு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன என்று கூறப்படுகிறது.

### பாலத்தைத் திருத்தும் முயற்சி

இதனிடையில் முன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14—11—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.07 முதல் 7.37 வரை
ராகுகாலம்:
10.37 முதல் 12 07 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருமூலர் குருபூஜைத் தினம்

## மந்திகை ஆஸ்பத்திரியில் வெளிநடப்பு

பருத்தித்துறை, நவ. 14

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதல்களைக் கண்டித்து வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஒரு மணி நேரம் வெளி நடப்புச் செய்தனர்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் குழந்தைவடிவேல் தலைமையில் டாக்டர்கள் தாதிகள், சிற்றூழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களும்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



கோர்பச்சேவ் வந்தாவது ஈழத் தமிழர் விஷயத்திலை சரியானபடி நடக்கச்சொல்லி ராஜீவுக்குப் புத்தி சொன்னார் எண்டா நல்லது போலை தான் இருக்கு...!

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், நவ. 14

நேற்றிரவு யாழ் நகரில் ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

தமிழ் சகோதரர்களே என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் இத் துண்டுப் பிரசுரம் அச்சிடப்பட்டிருந்தது. (இ-10)

# யாழ். நகரில் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனையும் ஏனைய போராளிகளையும் வீட்டுக் காவலில் இருந்து உடனடியாக விடுவிக்கக் கோரி இன்று மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெறுகிறது.

இன்று காலை 9 மணி அளவில் பெருமாள் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் நாவலர் வீதி, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, திருநெல்வேலி, நல்லூர், பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி ஆகியவற்றினூடாகச் சென்று யாழ். பஸ் நிலையத்தை அடையும்.

இந்த ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவிக்குமாறு வர்த்தக ஸ்தாபனங்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்பு நாள் அனுஷ்டிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 14

மலையகப் பாட்டாளிகளின் குடியுரிமை பறிக்கப்பட்ட நாளான நாளை நவம்பர் 15ஆம் திகதி எதிர்ப்பு நாளாக அனுஷ்டிக்கும்படி தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரமொன்றையும் மேற்படி இணைப்புக் குழு வெளியிட்டுள்ளது.

இதே வேளை நாவாந்துறை, உரும்பராய், சாவகச்சேரி - மட்டுவில், பருத்தித்துறை - மண்டான், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் நாளை பொதுக்கூட்டங்களும் நடைபெறும். (இ-10)

## வவுனியாவிலும் நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கக் கோரி நேற்று வவுனியாவில் இரண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

நேற்று காலை பூவரசங்குளத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் ஒன்று வவுனியா கல்மடு பாடசாலையை வந்து அடைந்தது.

சாஸ்திரியாங்குளப்பகுதியில் இருந்து ஆரம்பமான மற்றொரு ஊர்வலமும் கல்மடு பாடசாலையை வந்து சேர்ந்தது.

சுமார் நாலாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்த ஊர்வலங்களில் பங்குபற்றினர்.

இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ள வவுனியா மாவட்டத்தில் இப்படியான ஊர்வலம் நடத்தப்பட்டது வியக்கத்தக்கதாகும் எனவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் சங்கம் வன்மையான கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.14

ஈழத் தமிழ் விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் தமிழ் நாட்டில் வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை யாழ். வர்த்தகர் சங்கம் வன்மையாக கண்டித்திருக்கிறது.

சங்கம் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுத்து இருக்கிறது.

விடுதலை இயக்கத் தலைவர்களை நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்து ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

ஈழம் வாழ் தமிழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சீபிளேன் வட்டமிட நெல்லியடிப் பகுதியில்

## ஹெலி தாக்குதல்

கரவெட்டி, நவ. 14

நேற்றுக் காலை வதிரி, மாலிசந்திப் பகுதிகளில் சீபிளேன் வட்டமிட ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இச் சம்பவத்தில் இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுக் காலை 9 மணி அளவில் வதிரி பாடசாலை முன்பாக இருந்து இந்த ஹெலிக்கொப்டர் தாக்குதல் ஆரம்பமானது.

அப்போது வதிரியைச் சேர்ந்த 72 வயதான கந்தவனம் ஐயாத்துரை என்பவரும் 25 வயதான அமிர்தலிங்கம் என்பவரும் காயமடைந்தனர்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கையில் ஐயாத்துரை காயமடைந்தார். இவர் நெல்லியடி நகரபிதாவாக இருந்தவர்.

இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இத் தாக்குதலில் நெல்லியடியில் இருந்து பருத்தித்துறை சென்ற இரண்டு மினிபஸ்கள் சேதமடைந்தன.

இத் தாக்குதலைத் தொடர்ந்து வதிரி திரு இருதயக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் நேற்றுக் காலை 10

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எப். கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 14

ஈழ விடுதலை இயக்கங்களின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும், போராளிகளையும் கைது செய்தும் ஆயுதங்களையும் பொருள்களையும் கைப்பற்றியும் இருக்கும் நடவடிக்கையானது ஈழ மக்கள் மத்தியில் இந்தியா தொடர்பான அச்சத்தையும் பல்வேறுபட்ட சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளது.

இந் நடவடிக்கையானது ஈழ விடுதலைப் போராட்டத்தையும், ஈழ மக்களையும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலை இயக்கங்களையும் அவமதிப்பதாக உள்ளது.

இந்தியா இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் ஓர் குழப்பமான நிலையை விட்டுவைத்துள்ளது.

இந் நடவடிக்கையை மேற்கொண்டது இந்திய மத்திய அரசா? அல்லது மாநில அரசா? என்ற திட்டவட்டமான பதிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதம் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணாமல் போனதை கண்டித்து; இயக்கங்கள் எதுவும் இதுவரை நடவடிக்கை எடுக்காததால் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்று 30 மாணவர்கள் இருநாள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

சனி காலை வரை இவர்கள் உண்ணாவிரதம் இருப்பர்.

இவர்களை தொடர்ந்து சனி காலை முதல் வேறு 30 மாணவர்கள் இருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொள்வர்.

இவர்களுக்கு ஆதரவாக நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்கள்.

19ஆம் திகதி முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-5)

## எட்டிப் பார்த்தவரை சிப்பாய்கள் குடும்பத்துடன் அழைத்தனர்

வல்வெட்டித்துறை, நவ 14

பதுங்கு குழிக்குள் குடும்பத்தினரை இறக்கி விட்டு வெளியில் எட்டிப்பார்த்து நோட்டம் விட்ட குடும்பத் தலைவரை ஸ்ரீலங்கா சிப்பாய்கள் குடும்பத்துடன் முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை வல்வையில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

வல்வை இராணுவ முகாமுக்கு அண்மை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டமானாறு

# முகாமிலிருந்து வெளியே வருவது தடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ 14

தாக்குதலில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளைத் திசை திருப்புவதற்காக, தொண்டமானாறு முகாமிலிருந்து சிப்பாய்கள் வெளியேவர முயன்றனர். ஆனால் அவ்வாறு வராது போராளிகள் தாக்குதல் நடத்தித் தடுத்தனர். சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பினர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

வடமராட்சிப் பகுதியை இரண்டு நாட்களாக ஆக்கிரமிக்க முயன்ற முப்படையினருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோர்பச்சேவ் நவ. 25 இல் இந்தியாவில்

புதுடில்லி, நவ. 13

சோவியத் அதிபர் கோர்பச்சேவ் இம்மாதம் 25ஆம் திகதி இந்தியாவில் நான்கு நாள் விஜயம் ஆரம்பிக்கிறார். (இ)

## புத்தூர் ஊடாக பஸ் சேவை

பருத்தித்துறை, நவ. 14

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் சாவகச்சேரி - புத்தூர் ஊடாகவே நடைபெறுகின்றன.

தனியார் மினி பஸ் சேவையும் இ. போ. ச.

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு இந்திய மருந்து வகை அன்பளிப்பு

கொழும்பு, நவ 15

யாழ்போதனா ஆஸ்பத்திரிக்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகளை இந்திய அரசாங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகளின் அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இம்மருந்து வகைகளை உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கும்படி அங்கீகாரம் அளித்தார்.

அதைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள இந்தியப் பதில் தூதுவர் கே. ஆர். சின்ஹா, யாழ் போதனா ஆஸ்பத்திரி இயக்குநர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், போதனா அமைச்சுச்செயலாளர் டாக்டர் ஜாசியன் ஜெயசூரிய ஆகியோரிடம் நேற்று இம் மருந்து வகைகளைக் கையளித்தார்.

இந்த வைபவம் இந்தியா ஹவுஸில் இடம் பெற்றது. (அ-எ)

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவரும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் பல்கலைக்கழக மூன்றும் வருட மாணவன் விஜிதரன் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்று யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்துகிறார்கள்.

இன்று காலை 8 மணி

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாடு சட்ட சபை தீர்மானம்

சென்னை, நவ. 13

ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று பண்டிதர் நேரு அளித்த உறுதிமொழிக்கு அரசியல் சட்ட உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று தமிழ் நாடு சட்ட சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நேருவின் உறுதிமொழிக்கு உத்தரவாதமளிக்கும் விதத்தில் அரசியல் சட்டத்தைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

விராட் விஸ்வப் பிரம்மனே நம:
திறப்பு விழா அழைப்பிதழ்
அன்புடையீர்,
நிகழும் அக்ஷய ஆண்டு ஐப்பசித் திங்கள் 28ஆம் நாள் (14-11-86) வெள்ளிக்கிழமை காலை 5-00 மணி முதல் 7-00 மணி வரையுள்ள நல்லோரையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்
சன் ஸ்ரார் ஜுவலறி
SUN STAR JEWELLERY
என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்கவிருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் சமயோசிதரும் வருகை தந்து சிறப்பிக்குமாறும் ஸ்தாபன வளர்ச்சிக்குதவுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்ளும்
தங்களன்புக்குரிய
K. S. மணியம்
K. கிருஷ்ணசாமி
147 B (337), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயமாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிக்க-குடிக்க தண்ணீர் இன்றி திருமலை அகதிகள் அவலம்

## பவுஸர் மூலமே சொற்பம் வழங்கப்படுகிறதாம்

திருகோணமலை, நவ.14

திருகோணமலை நகரில் இருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டு சீனன்வாடி கிளப்பன்பேர்க் ஸ்டோர் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள 1500 தமிழ் அகதிகளும் குளிக்க, குடிக்கத் தண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர்.

பவுஸர் ஒன்றில் கொண்டு சென்று இவர்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

அகதிகள் தாங்கள் வைத்திருக்கும் பாத்திரங்களில் நீரை வாங்கி வைத்துக் குளிக்கவும் குடிக்கவும் பயன்படுத்த வேண்டியுள்ளதாம்.

வழங்கப்படும் உணவுப் பொருள்களை அகதிகளே சமைத்துச் சாப்பிடவேண்டும்.

போதிய மலசலகூட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் கிளப்பன்பேர்க் முகாமுக்கு வழங்கப்படவில்லை.

இவைகளைச் சீர்செய்து அகதிகளை நல்லமுறையில் பராமரிக்கும்படி திருமலைப் பிரசைகள் குழு, இராணுவ இணைப்பதிகாரி, அரசாங்க அதிபர் ஆகியோரை வேண்டியுள்ளது. (இ-எ-150)

### இரசிகமணி நினைவு தினம்

யாழ்ப்பாணம், நவ. 14

இரசிகமணி கனக செந்திநாதனின் 9ஆவது நினைவு தினம் இம்மாதம் 16ஆம் திகதி வருகிறது.

இதனையொட்டி அன்றைய தினம் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆரவில் விழா ஒன்று தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நினைவு நாள் விழாவுக்கு கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகிப்பார்.

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா இரசிகமணியின் படத்துக்கு மாலை சூட்டித் தொடக்க உரையை நிகழ்த்துவார்.

நினைவுப் பேருரையை கவிஞர் இ. முருகையன், திரு. சு. இராஜநாயகன் நிகழ்த்துவர்.

பொன்விழா சிறப்புரைகள் நூல் வெளியீட்டு விழாவுக்கு கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமை வகிப்பார். திரு. எஸ் திருச்செல்வம் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா, திரு. சு. ஆ. இரகுபதி பால ஸ்ரீதரன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ-எ)

## வீடுகளிலும் விடுதிகளிலும் இருக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், நவ.14

யாழ் பல்கலைக் கழகத்துக்கு வெளியே உள்ள வீடுகள், விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கமாணவர் அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

இதற்கென மாணவர் பாதுகாப்புக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் வெளிவிடுதி மாணவர்கள் பல்கலைக்கழகத்துள் தங்கியிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு பாதுகாப்புக் குழு கண்காணிப்பும் பாதுகாப்பும் வழங்கும் என மாணவர் அமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-5)

## புல்மோட்டை தாக்குதல் குறித்து ஈ. பி. ஆர். எல். எப்.

யாழ்ப்பாணம், நவ 14

புல்மோட்டைத் தாக்குதலில் 12 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இப்படி ஈ, பி ஆர். எல். எப். விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழ்மக்களின் பாரம்பரிய பூமியான திருமலையிலிருந்து நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்களை அகதிகளாக ஏனைய பிரதேசங்களுக்கு விரட்டி அடித்துவரும் சிறிலங்கா அரச படைகள் புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணியளவில் வெளியேறி ரோந்துசென்ற சமயம் மக்கள் விடுதலைப் படையிருக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேரடி மோதல் ஏற்பட்டது.

ஜீப் வண்டியில் வந்து கொண்டிருந்த 15 இராணுவத்தினரை புல்மோட்டை பொலீஸ் நிலையத்திற்கு கால்மைல் தூரத்தில் மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் தடுத்து நிறுத்தி சுமார் ஒரு மணித்தியாலம்வரை உக்கிரமான நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலின் போது 12 இராணுவத்தினர் ஒரே இடத்தில் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயத்துக்குள்ளானர்.

ஏனைய இருவரும் தப்பி ஓடிவிட்டனர். இம்மோதலின்போது பல நவீன ரக தன்னியக்க ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

அதேசமயம் எமது தோழர்களுக்கு எதுவித இழப்புமில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

87 A/L DAY CLASS

பிரிவு III ஆரம்பமாகிவிட்டது.

| | | |
|---|---|---|
| Pure-Applied Maths | — | 10.30 to 12.30 |
| Zoology | — | 1.30 to 2.30 |
| Botany | — | 2 30 to 3.30 |
| Physics | — | 3.30 to 4.30 |
| Chemistry | — | 4.30 to 5.30 |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல் கற்பிக்கப்படுகிறது.)

NEW MASTER INSTITUTE

B.M.C Lane, JAFFNA

யாழ். வாழ் முஸ்லிம் மக்களுக்கோர் நற்செய்தி!

திரு. நளீம் ஹாஜியாரின் இலங்கையிலே மிகப்பெரிய கோழிப் பண்ணையான Bairaha Farms இல், விஞ்ஞான முறைப்படி, மிருகவைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க வளர்க்கப்பட்டு இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கமைய (HALAL—ஹலால்) சுகாதார முறைப்படி தயார் படுத்தப்பட்ட சுவைமிக்க கோழி இறைச்சி!!

"BAIRAHA FARM BROILERS"

[(B) பைரா (F) பாம் புரெய்லர் கோழி இறைச்சி]

1 kg. 62–50

குறிப்பு:

* பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்ட வாகனத்தில் (FREEZER TRUCK) தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (COLD ROOM) சேமித்து வைக்கப்பட்டுள்ளது. —எம்மிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
* மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண விநியோகஸ்தர்:-

The Medical Hall — மெடிக்கல் ஹோல்

No. 224, Hospital Road, JAFFNA.

இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Phone: 22575

தொலைபேசி: 22575

### டிப்ளோமா முதலாம்பகுதி பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.14

புதிய பழைய பாடத்திட்டத்தின் கீழான பட்டப்படிப்பு பின் கல்வி டிப்ளோமா முதலாம் பகுதி பரீட்சை இம் மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

இலங்கை திறந்த பல்கலைக் கழக சிரேஷ்ட உதவி பதிவாளர் இதனை அறிவித்திருக்கின்றார்.

தகுதியுடைய சகல மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ்ப்பாணம் பிராந்திய திறந்த பல்கலைக் கழக அலுவலக உதவி அத்தியட்சகர் திரு. ந. மகாதேவன் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். (இ-எ)

### இளையதம்பி வித்தியாலய அபி.சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலய அபிவிருத்திச் சபையினரின் ஆண்டுப்பொதுக் கூட்டம் அதிபர் க. கணேசநாதன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறும்.

நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி சிறப்புரையாற்றுவார். (இ)

### பூசைவழிபாடும் நினைவு கூரல் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், நவ.14

சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம், காலம் சென்ற அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாகவும், அவர்களின் ஆத்தும ஈடேற்றத்திற்காகவும் நாளை 15 திகதி சனிக்கிழமை சங்கத்தின் தலைவரும், கல்லூரி அதிபருமாகிய அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் தலைமையில், காலை 6.30 மணிக்கு பூசைவழிபாடும், அதைத் தொடர்ந்து சங்க மண்டபத்தில் நினைவு கூரல் சொற்பொழிவும் நடத்தவுள்ளது.

அண்மைக்காலங்களில் இராணுவ தாக்குதல்களினுல் கொல்லப்பட்ட அருட் திரு. மேரி பஸ்ரியன், திரு. ஜேசுதாசன் (விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி) உட்பட இன்னும் பலரினது ஞாபகார்த்தமாகவும் இந்நிகழ்ச்சி யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ)

### 'அக்பா' குதூகல இரவு

யாழ்ப்பாணம், நவ.14

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஹேலீஸ் போட்டோ பிரின்ற் லிமிட்டெட்டின் ஆதரவில், புகழ்பெற்ற தொலைக்காட்சி, திரைப்பட, வானொலிக்கலைஞர்கள் பங்குபற்றும் 'அக்பா குதூகல இரவு' பல்சுவைக் கதம்பநிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

யாழ் மாவட்ட கல்லூரி மாணவ, மாணவியருக்கிடையிலான பொது அறிவுப் போட்டியும் இதே அரங்கில் இடம்பெறும். இந்த ஸ்தாபனத்தினர் நடத்தும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் அதே தினத்தில் நடைபெறும். (இ-5)

### கட்டட நிதி

கிளிநொச்சி, நவ. 14

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி கலைவாணி மத்திய சனசமூக நிலைய கட்டட நிதிக்காக கடந்த 2 ஆம் திகதி அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பும், திரைப்படக் காட்சிகளும் இடம்பெற்றன. (இ-76)

## தமிழர்கள் சூழலை அபிவிருத்தி செய்யவேண்டும்

கிளிநொச்சி, நவ. 14

தமிழர்கள் தமது மண்ணுக்கும், பிரதேசத்திற்கும், அவற்றின் வளத்துக்கும் சிறப்புக்கும் உதவவேண்டுமானுல் நிச்சயம் அவர்கள் தமது சூழலை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

வட்டக்கச்சி கலைவாணி சனசமூகநிலைய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பையும் திரைப்படக் காட்சியையும் நடத்தி வைத்துப் பேசிய கிளிநொச்சி கச்சேரி சமூகசேவை உத்தியோகத்தர் பொன். நித்தியானந்தம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஈசன் தலைமையில் நிலைய முன்றலில் இவ்வைபவம் நடைபெற்றது.

சமூகசேவை உத்தியோகத்தர் தொடர்ந்து பேசுகையில்;

தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களில் சிவில்நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் இருக்கும் இக்கால கட்டத்தில் மக்கள் தமது தேவைகளைத் தாமே முன்வந்து செயல்படுத்த வேண்டும்.

அந்தவகையில் இந்த நிலையத்தின் கட்டட வளர்ச்சிக்காக அதிர்ஷ்டலாபச் சீட்டின்மூலம் பணம் சேகரிப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

இதனையடுத்து வட்டக்கச்சி பதிவுகாரர் எஸ். குமாரசுவாமி, இண்க்க சபைத் தலைவர் வை. கைலாசபிள்ளை, பாரதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த எஸ். நமசிவாயம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் சி. தங்கராசா உட்படப் பலரும் உரையாற்றினர். (இ-76)

## கல்விமான்களை தீவுப்பகுதிதான்தந்தது

### கல்விப்பணிப்பாளர் கூறுகிறர்

வேலணை, நவ. 14

சிறந்த கல்விமான்களையும், சிறந்த அறிவாளிகளையும் தீவுப்பகுதிதான் நாட்டுக்கு அளித்திருக்கிறது.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் வேலணையிலுள்ள பதினெரு பாடசாலைகளின் கொத்தணி அமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் [illegible] தீவுப்பகுதி [illegible] வகையில் இங்கே குறைகள் இல்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்கு வரும்போது இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு வரக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு இயற்கைக் காட்சிகளை ரசிப்பதனுல் வீட்டில் பல துன்பங்கள் இருந்தாலும் அதனை மறந்து செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றார்.

ஆனுல் கிளிநொச்சி, வவுனியா முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குச் செல்லும் ஆசிரியர்கள் எவ்வளவு தடைமுகாம்களை தாண்டி பல இன்னல்களுக்கு மத்தியில் [illegible] இருக்கின்றது.

இப்படி அவர் கூறினர் (இ-167)

## வல்வை பகுதியில் பலர் இடம் பெயர்வு

வல்வெட்டித்துறைநவ14

வல்வையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சண்டை காரணமாக தொண்டமானுறு கெருடாவில் மலியதனை போன்ற இடங்களில் மக்கள் குடிபெயர்ந்தனர்.

கெருடாவில் இந்து தமிழ் கலவன்பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, நவிண்டில் தாமோதர வித்தியாசாலை ஆகியவற்றில் இவர்கள் அகதிகளாக தங்கினர்.

அகதிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கியது.

மேலும் இவர்கள் தங்கியுள்ள இடங்களைச் சுற்றவுள்ள மக்களும் உணவு உதவிகளை வழங்கினர். (இ-160)

மக்கள் முகம்

### இமையாணன் அறிவாலய சனசமூக நிலயம்

வல்வெட்டித்துறை. நவ, 14

இமையாணன் அறிவாலய சனசமூக நிலையம் தனது புதிய ஆண்டுக்கான உத்தியோகத்தர்களை அண்மையில் தெரிவு செய்தது.

தலைவர்: திரு. வ. சி. மகேந்திரன், உபதலைவர் திரு. மு. இரத்தினம், செயலாளர் திரு சு. அரசலிங்கம், இணைச்செயலாளர் திரு. க. நற்குணம், பொருளாளர் திரு அ. அருந்தவராசா, கணக்குப்பரிசோதகர் திரு. வெ சிவலிங்கம், நூலகர் திரு சீ. ஆறுமுகம், காப்பாளர் திரு. க. அப்புக்குட்டி.

நிருவாக உறுப்பினர்களும் 8 பேர் தெரிவாகினர். விளையாட்டுக் குழுவுக்கு திரு. நா. திருநாமம், திரு. க. அப்புக்குட்டி, திரு. வெ. சிவலிங்கம் ஆகியோர் தெரிவாகினர். (இ-160)

## வான் மீது ஹெலி சுட்டு சாரதி காயம்

### நெல்லியடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 14

நெல்லியடி மாலிச் சந்திக் கருகில் திடீரென வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று வான்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனுல் வான் சாரதி காயம் அடைந்தார்.

காயமடைந்தவர் கந்தர் குலசிங்கம் (35 வயது)

குடல் வெளியேறிய நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதே வானில் கடமை புரிந்த நடத்துனர் குமரேசன் தவராசா சாரதியின் மைத்துனர் அங்கு நடந்த சம்பவம் பற்றிச் சொன்னதாவது:

பகல் ஒரு மணி அளவில் மாலிச் சந்தியில் வான் சென்று கொண்டிருந்தபோது எமது வானைத் துரத்தித்துரத்தி ஹெலிக்கொப்டர் சுட்டது.

தொடர்ந்தும் ஹெலி சுட்டதின் காரணமாக சாரதி வானை நிறுத்தினுர்.

நான் வானுக்குக் கீழ் படுத்துக் கொண்டேன். சாரதி ஓடிச் சென்று ஒரு பற்றைக்குள் மறைந்து கொண்டார்.

ஹெலி தொடர்ந்தும் சுட்டுக் கொண்டிருந்ததால் அவரின் வெள்ளைச் ஷேர்ட்டைக் கழற்றுமாறு நான் சத்தமிட்டேன்.

எனினும் தனக்கு சூடு விழுந்துவிட்டது என்று கூறினுர்.

அரை மணி நேரமாக கிட்டத்தட்ட 20 யார் தூரத்தில் உயர நின்று சுழன்று சுட்டது. அந்தக் ஹெலி.

அயலவரின் உதவியுடன் சாரதியை மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்த பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தோம்.

இப்படி அவர் சொன்னுர்

இவா கடமை புரிந்த வானும் ஹெலி சுட்டதில் சேதமடைந்தது. (இ-10)

### யாழ் பேக்கரி உரிமையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ.14

வடமாகாண பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் என்ற புதிய பெயரில் கடந்த ஞாயிறு புனரமைப்புச் செய்யப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சுரேன் கிறிஸ்தோப்பர், உபதலைவர்: திரு. க. நவரத்தினர், செயலாளர்: திரு. சு. குணரத்தினம், 10 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-எ)

### சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.14

சங்குவேலி இந்து மன்றமும் சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலையும் இணைந்து நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு: செல்வி ம. அகிலா (5ஆம் வகுப்பு) செல்வி. நா. லோஜினி (4 ஆம் வகுப்பு) செல்வி ம. தாரணி (3ஆம் வகுப்பு) செல்வி த. திருச்செல்வி (2ஆம் வகுப்பு) செல்வி இ. விஜயராணி (பாலர் மேற்பிரிவு) செல்வி வ. வருஜிகா (பாலர் கீழ்ப் பிரிவு) (இ-எ)

### கவிதை தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

'நல்லூரான் திருவடியை நம்பு'- என்ற கவிதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

நல்லைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் தலைமைவகிப்பர்.

துணைவேந்தர் சு. வித்தியானந்தன் மங்கள விளக்கேற்றி வைப்பார்.

நூல்வெளியீட்டு உரையை வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் நிகழ்த்துவார்.

ஸ்ரீ வீரமணி ஐயர், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. சொக்கன் உட்பட மற்றும் பலர் ஆய்வுரை வழங்குவர். (இ-எ)

## செய்திக்கொத்து

### நியமனம்

வேலணை, நவ, 14

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய பொது முகாமையாளராக புங்குடுதீவைச் சேர்ந்த திரு. வே. செல்லத்துரை நியமிக்கப் பட்டுள்ளார். (இ-167)

### கொத்தணி முறை

கரவெட்டி, நவ. 14

கொத்தணி முறை தீவுப்பகுதி பாடசாலைகளில் பலகாலங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்டிருக்கப்பட வேண்டும். எனினும் இப்போதாவது கொண்டுவரப்பட்டது வரவேற்கத்தக்கதே.

இவ்வாறு வேலணைக் கல்வி வட்டாரத்தில் கொத்தணி முறையை ஆரம்பித்து வைத்த வட பகுதி கல்விப்பணிப்பாளர்; திரு. இரா. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். (இ-70)

### சின்னவெங்காயம்

புங்குடுதீவு, நவ. 14

தீவுப்பகுதியில் சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். புங்குடுதீவு- நெடுந்தீவு- நயினுதீவு- நாரந்தனை வேலணை ஆகிய இடங்களில் பெருமளவு நிலப்பரப்பில் இம்முறை சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. (இ-131)

### நிறைவுவிழா

கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சி அம்பாள் நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் இருபது ஆண்டு நிறைவு விழா கடந்த 29 ஆம் திகதி அம்பாள் நகர் கிராம அபிவிருத்தி சங்க இராசேந்திரனுர் நூலகத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (இ-76)

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:
N.பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.
* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் &ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உங்கள் உதடுகள் மூடட்டும் உள்ளம் திறக்கட்டும்

— சுவாமி விவேகானந்தர்.


# உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

14-11-1986 க. பெ. இல. 23


## வரவும் செலவும்

1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரவு - செலவுத் திட்டம் (அது தான் பட்ஜெட்) வருகிறது என்றால் இலங்கை முழுவதும் பரபரப்பு அடைந்தது உண்டு.

எந்தெந்தப் பொருளுக்கு விலை உயரும் என்று வாடிக்கையாளர்கள் ஏங்கியவாறு நிதி அமைச்சரது வரவு - செலவுத் திட்ட உரையை ஆவலுடன் எதிர்பார்த்ததும் உண்டு.

எந்தெந்தப் பொருள்களின் விலை உயரும் என்பதை எப்படியோ மணந்து பிடித்து அவற்றைப் பதுக்குவதில் பெரும் வர்த்தகர்கள் ஈடுபட்டதும் உண்மை.

ஆனால் 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர், வர்த்தமானி மூலம், நள்ளிரவோடு நள்ளிரவாக பொருள்களின் விலைகள் உயரத் தொடங்கியதிலிருந்து வரவு - செலவுத் திட்டத்திற்கு இருந்த மதிப்பும், மவுசும், கனதியும் குறைந்து விட்டன. நாடாளுமன்றத்தில் சம்பிரதாய பூர்வமாகச் சமர்ப்பிக்கப்படும் கணக்கு வழக்கு என்ற நிலைக்கு அது தள்ளப்பட்டு விட்டது.

இத்தகைய சூழ்நிலையில் முழு இலங்கையிலுமே இவ்வருடத்திய வரவு — செலவுத் திட்ட உரை குறித்து மக்கள் அக்கறைப்பட்டதாக இல்லை. தமிழ் மக்களைப் பொறுத்த வரை வரவு — செலவுத்திட்டம், விலை உயர்வு, அதிகரித்த வரி என்பன குறித்து அவர்கள் நினைத்துப் பார்க்கவும் நியமமில்லை.

அரசியல் முடிவு எதுவும் இல்லாத நிலையில், கொழும்பில் தீர்மானிக்கப்படும் விலை உயர்வும், வரி அதிகரிப்பும் தமிழ் மக்களை நிச்சயம் பண வகையால் பாதிக்கும் என்பது உண்மை.

எனினும் சாவின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு இவை பெரும் பொருட்டாக முடியாது.

ஈழத் தமிழ் மக்கள் இப்போது அரசியல், பொருளாதார. சமூக அடிமை விலங்கில் சிக்குண்டு இருக்கிறார்கள். அது உடைத்து எறியப்படும் வரை அவர்களுக்கு விலை உயர்வும், விலை இறக்கமும் ஒன்றுதான்.

தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்று எந்தத் தமிழனாவது இந்நாளில் திட்டமிட முடிகிறதா? அவன் ஒன்றைத் திட்டமிட, அடுத்த நாளே ஹெலி வந்து குண்டு போட்டால் வாழ்க்கையே முடிந்து விடுகிறது!

சுருங்கக் கூறின் வாழ்க்கையே நிச்சயமற்ற நிலையில், அதன் எந்த அம்சத்திலும் ஒன்றி, உய்த்துச் செயலாற்ற முடியாத அவல நிலையில் தமிழன் வாழ்கிறான். ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய அத்தனை உரிமைகளும் மறுக்கப்பட்ட — களையப்பட்ட ஏகாந்த நிலையில் அவன் ஒடுக்கப்பட்டிருக்கிறான்.

கஷ்டங்கள் என்ற வரவும், உயிரிழப்பு என்ற செலவும் எப்போது இல்லாமற் போகின்றனவோ அன்று தான் தமிழருக்கு விடிவு.

வரவு செலவுத் திட்டம் குறித்து ஈழத் தமிழ் மக்கள் அக்கறை கொள்ளாமல் இருப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களைவிட பல பாவனைப்பொருள்களுக்கு ஏற்கனவே அவர்கள் அதிக விலை கொடுக்க வேண்டி உள்ளது.

பாதுகாப்புச் செலவை ஈடுசெய்வதற்காக தமிழ் பகுதிகளுக்கு வரும் பல பொருள்களுக்கு மறைமுக விலைகள் — அதிக விலைகள் அறவிடப்படுகின்றன.

வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டால் சாண் என்ன, முழம் என்ன என்று கேட்பார்கள்.

அந்த நிலைக்கு தமிழ் மக்களின் வாழ்க்கையும், விலைவாசிகளும் வந்துவிட்டன.

புதன்கிழமை வரவு செலவுத் திட்டத்தில் குடிவகை, புகைவகைகளுக்கு மட்டுமே விலை உயர்வுகள் அறிவிக்கப்பட்டன. ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு விலைகள் ஏறவில்லை. எனினும் அதனால் சந்தோஷப்பட தமிழ் மக்களுக்கு எதுவும் இல்லை.

இந்தப் பீடை நிலையிலிருந்து தமிழ் மக்கள் விடுபட வேண்டுமானால் எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்யக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். இப்பத்தியில் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டது போல, எமது மண்ணில் விளையும், விளைவிக்கக் கூடிய உணவுப் பொருள்களை நாம் உண்டு பழகவேண்டும்.

அதாவது மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முந்திய எமது மூதாதையர் உட்கொண்ட பொருள்களை எமது பிரதான உணவுப் பொருள்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். அதே போன்று கைத்தொழில் துறையிலும் சுதேசியத்தை வளர்க்க வேண்டும். அந்த உணர்வை தமிழர் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்வது அவசியம்.

## ஒன்றியம் ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 14

பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் காணமற் போனது குறித்து யாழ் பல்கலைக் கழக மாணவர் நடத்தும் போராட்டத்திற்கு தமது ஆதரவையும் பங்களிப்பையும் வழங்க யாழ் வெளிவாரி மாணவர் ஒன்றியம் முன் வந்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியத் தலைவர் கே. வாமதேவனும், செயலாளர் என். சுகுணனும் யாழ் பல்கலைக் கழக மாணவர் அமைப்பிற்கு எழுதியுள்ள கடிதத்தில்; விஜிதரன் மறைவு மர்மம் தொடர்ந்து நீடிப்பது நியாயம் கற்பிக்க முடியாத ஒரு குழுவினர் செயல் என்று குறிப்பிட்டுள்ளனர். (இ-5)

# தமிழையும் தேசிய மொழியாக்க தமிழக அரசு கோரும்

### சட்ட சபையில் எம் ஜி. ஆர் பிரேரணை கொண்டு வருவார்

சென்னை, நவ. 13

தமிழையும் தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் இந்திய அரசமைப்பின் 17 ஆம் பிரிவை திருத்தம் செய்யவேண்டும் என்று தமிழக அரசு கோர இருக்கின்றது.

இதற்கான பிரேரணையை தமிழ்நாடு சட்ட சபையின் முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் கொண்டுவர இருக்கிறார்.

தமிழ், தேசிய மொழி ஆகும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்றும் தமிழக அரசு கொண்டுவரவுள்ள பிரேரணை கோரும்.

இத்தகவலை மாநிலக் கல்லூரி மாணவர் பேரவையின் ஆரம்பக் கூட்டத்தில் தமிழக அமைச்சர் வி. வி. சாமிநாதன் வெளியிட்டார்.

ஆகவே மாணவர் இந்திஎதிர்ப்புப்போராட்டத்தைக்கைவிட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (இ-எ)

### போத்தாவுடன் தொடர்பு இருக்காது

பாரீஸ், நவ. 13

பாரீஸுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அதிபர் போத்தாவுடன் பிரெஞ்சு அரசாங்கம் எது வித தொடர்பையும் வைத்திருக்காது.

இப்படி பிரெஞ்சு அரசு அறிவித்திருக்கிறது.

நிற வேற்றுமைக் கொள்கையை பிரெஞ்சு அரசு எதிர்ப்பதனாலேயே தென் ஆபிரிக்க அதிபருடன் தொடர்பு எதையும் வைத்து கொள்வதில்லை என்று பிரெஞ்சு அரசு தீர்மானித்துள்ளது. (இ-எ)

### வெளி உலகில்

### பாப்பரசர் கொலை முயற்சி நீதிமன்ற விசாரணை முடிவு

ரோம், நவ. 13

பரிசுத்த பாப்பாண்டவரைக் கொலை செய்ய முயற்சித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 3 பல்கேரியர்கள், 3 துருக்கியர்கள் மீதான நீதிமன்ற விசாரணை முடிவுற்றன.

1981 இல் பாப்பாண்டவரைக் கொலை செய்ய முயற்சித்த குற்றத்துக்காக தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உள்ள அலி அக்ஸா என்ற அரபுவாசி இவ்வழக்கு விசாரணையில் முரண்பட்ட சாட்சியம் அளித்தார் என்று அறிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் ஜுரர் சபை தீர்ப்பை இன்னொரு திகதிக்கு ஒத்திவைத்தது. (இ-எ)

### மகாராணியின் தாயார் சுகயீனம்

லண்டன், நவ. 13

இரண்டாவது எலிஸபத் மகாராணியின் தாயாரான 86 வயதான மகாராணி சுகயீனம் காரணமாக அரச ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (இ-எ)

### அரபுகளுக்கு பிரசா உரிமை

டமாஸ்கஸ், நவ. 13

சிரியா தனது நாட்டில் வாழும் சகல அரபு மக்களுக்கும் சிரிய பிரசா உரிமை வழங்கப்போவதாக அறிவித்து உள்ளது.

பிரசா உரிமை கோரும் அனைவரும் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவேண்டும்.

''கொள்ளை நோயினால் பீடிக்கப்படாதவர்களாகஇருந்தால்போதும் விண்ணப்பிப்பவர்கள் அனைவருக்கும் சிரிய பிரசா உரிமை வழங்கப்பட்டுவிடும்''

இப்படி சிரியா அறிவித்துள்ளது. (அ-எ)

### நிக்கரகுவா தூதுக்குழு இஸ்ரவேல் செல்லும்

டெல்அவிவ், நவ. 13

நிக்கரகுவா அரசுத் தூதுக்குழு ஒன்று இஸ்ரவேலுக்கு 1981 ஜனவரியில் விஜயம் செய்ய உள்ளது.

இப்படி ஜெரூஸலம் வானொலி அறிவித்தது.

நிக்கராகுவாவில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் புரட்சி ஏற்பட்டது.

அதன் பின்னர் புரட்சி அரசாங்கத்தின் தூதுக் குழு ஒன்று இஸ்ரவேலுக்கு விஜயம் செய்ய இருப்பது இதுவே முதல் தடவை.

இப்படி ஜெரூஸலம் வானொலி மேலும் அறிவித்தது. (இ-எ)

## 'எய்ட்ஸ்' நோய்க்கு எதிராக பிரிட்டன் தீவிர பிரசாரம்

லண்டன், நவ. 13

'எய்ட்ஸ்' நோய்க்கு எதிராக தீவிரப் பிரசாரம் ஒன்றை மேற்கொள்ள பிரிட்டன் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

செய்திப் பத்திரிகைகள். டெலிவிஷன், சுவரொட்டிகள் மூலம் இப்பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

'எய்ட்ஸ்' தடுப்புப் பற்றிகவனிக்க நியமிக்கப்பட்டு உள்ள அமைச்சரவைக் கமிட்டி இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த நூற்றாண்டு முடிவுக்குள் பிரிட்டனில் 'எய்ட்ஸ்' நோயைக் கட்டுப்படுத்துவதே அமைச்சரவைக் கமிட்டியின் நோக்கம்.

பிரிட்டனில் வாழும் ஒவ்வொரு பிரசைக்கும் தனித்தனியே விலாசமிடப்பட்ட 'எய்ட்ஸ்' தடுப்புத் துண்டுப் பிரசுரங்களை தபால் மூலம் அனுப்பி வைக்க பிரிட்டன் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-எ)

### எண்ணெய் விலை அதிகரிக்க சவூதி கோரிக்கை

பஹ்ரைன், நவ. 13

எண்ணெய் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்று சவூதி அரேபிய மன்னர் பஹத் மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பான விசேஷ செய்தி ஒன்றை மன்னர் பஹத் ஈரானுக்கு அனுப்பி உள்ளார்.

தற்போது பீப்பாய் எண்ணெய் விலை 15 டாலராக உள்ளது. இது 18 டாலராக அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே சவூதிஅரேபியாவின் கோரிக்கை ஆகும்.

இது தொடர்பாக ஆராய 'ஒபெக்' அமைச்சர்கள் வெள்ளி சனிக்கிழமைகளில் ஈகுவடோரில் கூட உள்ளனர். (இ)

### 300 மாணவர்கள் தப்பினர்

மாஸ்கோ, நவ. 12

ஜப்பான் கடலில் தீப்பற்றிய பயணக் கப்பல் ஒன்றில் இருந்து சுமார் 300 ரஷ்ய மாணவர்கள் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டனர்.

கடந்த திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கப்பல் மாலுமிகள் இரண்டு பேர் உயிரிழந்தனர். (இ-எ)

# வரத்தால் வாழ்வு பெற்ற மார்க்கண்டேயர்

சிவனின் திருவருளும் அன்புமே உறுதுணையாக தமது 16 வயதினிலே மணி கன்னிகை என்னும் திருக்கோயிலினுள் தென் பகுதியில் இருந்துகொண்டு சிவலிங்கம் அமைத்து பூசைகள் செய்து தவம் செய்ய ஆரம்பித்தார் மார்க்கண்டேயர்.



மார்க்கண்டேயரது பூசையையும் தவத்தையும் உணர்ந்த சிவபெருமான் மார்க்கண்டேயருக்கு அருள் தோற்றம் கொடுத்து யாது வேண்டும் என வினவ இச்சிறியேன் இயமன் கைப்படாது உய்யும் பொருட்டு நீர்எதிர்வந்து அருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்.

கிருபா சமுத்திரமாகிய எம்பெருமான் இயமனுக்கு அஞ்சாதே என திருவாய்மலர்ந்தருளினார். தனது திருவடிகள் இரண்டையும் மார்க்கண்டேயரது சிரசில் வைத்து அருள்செய்தார். மார்க்கண்டேயர் மகிழ சிவபெருமான் மார்க்கண்டேயர்வழிபட்ட சிவலிங்கத்தினுள் மறைந்தார்.

அதன்பின்பு மார்க்கண்டேயருக்கு பதினாறு வயது முடிவடைய ஒரு இயமதூதன் தோன்றி மார்க்கண்டேயரது சிவபூசையைக் கண்டு அஞ்சி மீண்டும் இயமனிடம் திரும்பினான்.

இதனால் இயமன் சீற்றங்கொண்டு எருமைக் கடாவில் ஏறி குடை, கொடி பிடிக்க வீரர்கள் சூழ காசிக்குச் சென்று மார்க்கண்டேயர் இருக்கும் இடத்தை அடைந்தான். சிவந்த குஞ்சியும், கரிய வீரமும், கோபத்தினால் நெருப்பைக் கக்கும் கண்களும், பிடித்த பாசமும், கையில் ஏந்திய தண்டமும் சூலமுமாய் மார்க்கண்டேயரை எதிர்த்தான்.

எவர்வந்து காப்பினும் உன் உயிரைக் கொண்டு செல்வேன் என்றான்.

**யமசங்காரம் இன்று**

சிவனை வழிபடினும் நீ என்பின்னே தென்புலம் வரவேண்டும் என்றான்.

மார்க்கண்டேயர் அச்சமின்றி முடிவென்பது சிவனின் அடியவர்களுக்கு இல்லை என்றும் அப்படி இருந்தாலும் உனது உலகத்திற்கு வரார்கள், கைலைசென்று அடைவர் என்றும் தெரிவித்தார்.

சிவனடியார்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருட்களையும் அறிந்தவர்கள். அவர்கள்பிறவித் துன்பத்தினின்றும் நீங்கியவர்கள். அவர்கள் இறைவனின் திருவடியைச் சேரவல்லவர்கள். அவர்கள் உன்னைமதியார்கள். அவர்கள் சிவனைத் தவிர வேறு எவரையும் மதியார்கள் என்றார்.

மார்க்கண்டேயர் கூறியதைக் கேட்ட இயமனுக்குக் கோபம் மிக என்னை நீ அச்சுறுத்துகிறாய், வலியில்லா தவனே! நம்முயிரை இயமன் கைக்கொள்ளமாட்டான் என்று நினைத்தாய் போலும் என்றான், நேரே நின்றால் வாரான் என்று நினைத்தான்- நீலமலை போல மார்க்கண்டேயர் முன் சென்றான். பாசத்தைவீசினான், அப்போது மார்க்கண்டேயர் பெருமானைத் துதித்துக்கொண்டு அவருடைய நித்தியானந்தவடிவாகிய திருவடி நீழலைப் பிரியாது நின்றார். இயமன் கைப்பாசம் தமது கழுத்தில் ஊர்வதைச் சிறிதும் உணராத மார்க்கண்டேயர் முன்பாக திரிபுராந்தகராகியமுதற் கடவுள் தோன்றி மைந்தனே உனது துன்பத்தை நீக்கினோம் அஞ்சாதே என திருவாய் மலர்ந்தருளி தமது இடது பாதத்தினால் இயமனைச் சிறிது உதைத்தார்.

உதைத்தவுடனே இயமன் பூமியில் வீழ்ந்து இறக்க அவனது வாகனமும்வீழவீரர்களும்வீழ்ந்து இறந்தனர்.

**ஞானக்கதிர்**

எம் உயிரைக் காக்க சிவபெருமான் உண்டு. இயமன் வந்து யாதுசெய்தான் என மார்க்கண்டேயர் தோத்திரம் பாடினார்.

சிவன் மைந்தனே எம்மை மெய்யன்போடு வழிபட்டமையால் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம் என அருளி மறைந்தார்.

மார்க்கண்டேயரது பெருமையையும் சிவனின் அன்பிற்குக் கட்டுப்பட்டவர் என்பதையும் இயம்பும் வகையில் நல்லூர் சிவன்கோயில், கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலும் இயமனைக் காலால் உதையும் இயம சங்காரம் இன்று இடம் பெறுகின்றது.

**து. இராதாகிருஷ்ணன்**

### பரீட்சையில் 4000 மாணவர் தோற்றினர்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ் மாவட்ட ஜி. சி. ஈ. (சாதாரணதர) மாணவர்களுக்கு ஆதி திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய பரீட்சையில் 4000மாணவர்கள் தோற்றினர்.

82 பரீட்சை நிலையங்களில் தமிழ், சைவநெறி பாடங்களில் பரீட்சை நடைபெற்றது.

இப்பாடங்களில் விசேஷ சித்தி அடையும் மாணவர்களுக்கு சங்கம் பரிசில்கள் வழங்கும் என அதன் செயலாளர் திரு. [illegible] தெரிவித்தார். (இ-5)



**பொய்யாமொழி**

குறள்:

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கையிழையா தற்று.

பொருள்:

(தன் வல்லமை புலப்படுத்தச்) சினத்தைத் பொருளென்று கொண்டவன் அழிதல் நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாதது போல் ஆகும்.

### 2 தமிழருக்கு பொலீஸ் அதிபர் பதவி

கொழும்பு, நவ. 14

இரண்டு தமிழர் பொலீஸ் அதிபர்களாக பதவிஉயர்வு பெற்றனர்.

பதவி உயர்வு பெற்ற 17 பேரில் இவர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

விவரம் வருமாறு:

திரு. எஸ். செல்லத்துரை, பொலீஸ் தலைமைக்காரியாலயம், (கட்டடப் பிரிவு)

திரு. எஸ் எஸ் நவரத்தினராசா. (எல்பிட்டிய) (இ-எ)

## அடுத்த ஆண்டு முதல் 'கெயர்'பிஸ்கெட் அமைச்சின் பொறுப்பில்?

வட்டுக்கோட்டை, நவ. 14

பாடசாலை மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 'கெயர்' பிஸ்கெட் அடுத்த ஆண்டு முதல் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு மா நகரிலிருந்து இந்த பிஸ்கெட்டை லொறி மூலம் கொண்டு வருவதற்கு போக்குவரத்து வசதிகள் தடைப்பட்டதன் காரணமாக பிஸ்கெட் விநியோகம் சிறிது காலம் தாமதமாகியிருந்தது.

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களது கஷ்டங்களை உணர்ந்த 'றெட்பானா' நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கான 'கெயர்' பிஸ்கெட்டை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் ஏற்றி வருவதற்கான செலவினங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் காரணமாக இந்த பிஸ்கெட் கொழும்பிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த பிஸ்கெட்டுக்கான மூலப் பொருள்களை 'கெயர்' ஸ்தாபனம் கொடுத்து வந்தது.

இந்த ஸ்தாபனத்தின் திட்டப்படி 1986 ஆம் ஆண்டுடன் பாடசாலைகளுக்கான பிஸ்கெட் விநியோகம் நிறுத்தப்பட இருக்கிறது.

ஆனால் 'கெயர்' ஸ்தாபனத்தின் உதவியின்றி சகல பொறுப்புக்களையும் ஏற்றுத் தொடர்ந்தும் பாடசாலை மாணவர்களுக்கு பிஸ்கெட் விநியோகிப்பதற்கான திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு உருவாக்கியுள்ளதாக அறியக்கிடக்கிறது.

1987 முதல் கல்வி அமைச்சினாலேயே இந்த பிஸ்கெட் விநியோகம் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-161)

## பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றும் கடமை பெற்றோரிடம்

புங்குடுதீவு, நவ. 14

பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றும் பாரிய கடமை இன்று பெற்றோர்களையே பெரிதும் சார்ந்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் அரசு அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமென எதிர்பார்க்க முடியாது. நமது பிள்ளைகளின் நலன் கருதி நாமே முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு இ. ச. செல்லத்துரை.

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழா வொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரஸ்தாப வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சி. நடராசா, ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி நா. மாணிக்கம், இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர் திரு. த. தவராசா ஆகியோரின் சேவைகளைப் பாராட்டு முகமாக இவ்விழா நடைபெற்றது.

தற்போதைய அதிபர் திரு. சு. பூராசா இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க.இ ஆறுமுகம் பேசுகையில் சீர்யகல்விப் பணியாற்றுபவர்களைச்சமுதாயம் என்றும் நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளது என்றார்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் ஒய்வுபெற்ற அதிபர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சம்பளத்திட்டம்

அச்சுவேலி, நவ. 14

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க நிர்வாகம், சங்கத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் கூட்டுறவுத்துறை அமைச்சினால் அறிவிக்கப்பட்ட புதிய சம்பளத்திட்டத்தை வழங்குகின்றது. (இ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

14 - 11 - 1986 வெள்ளிக்கிழமை

ஸ்ரூடியோ வீனஸ்
சிறந்த கலர், கறுப்பு - வெள்ளை படப்பிடிப்பாளர்கள்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# விஜிதரனை நிபந்தனை இன்றி விடுவிக்குமாறு கோருகிறார்கள்

## கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர்

யாழ்ப்பாணம், நவ. 14

பிரதேச அடிப்படையில் ஒற்றுமை பேணப்படவேண்டிய இக்கால கட்டத்தில் மாணவன் விஜிதரன் காணமற்போன சம்பவம் இடம் பெற்றது வருத்தத்துக்கு உரியது

இப்படி கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது– விஜிதரன் சம்பவத்தைப் பயன் படுத்தி சில சந்தர்ப்ப அரசியல் வாதிகள் எம்மக்களிடையே பிரிவை ஏற்படுத்த முயல்வர்.

எமது பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை நாம் பிரதேச ஒற்றுமையை என்றும் பேணிக் காத்து வந்துள்ளோம்.

குறுகிய நோக்குடைய அரசியல் வாதிகளுக்கு இடமளிக்காது இருக்க, விஜிதரனை நிபந்தனை இன்றி விடுவிக்க வேண்டும் என்றுகோருகிறோம். தீயசக்திகளின் ஊடுருவலைத் தடுக்க இது உதவும். புனித இயக்கங்கள் அனைத்தும் இது விடயத்தில் தலையிட்டு விஜிதரனை மீட்க உதவ வேண்டும்

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

### விஜிதரன் விவகாரம்

## பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், நவ. 14

மாணவன் விஜிதரன் காணமற்போன சம்பவம் தொடர்பாக மாணவ சமுதாயத்தின் நியாயமான ஆழ்ந்த கவலையில் பங்குகொள்கிறோம்.

அம் மாணவன் பாதுகாப்பாக திரும்புவதற்கு உதவுவதன் மூலம யாழ்ப்பாணத்தின் நற்பெயரை நிலை நிறுத்த உதவும்படியும் அத் தீர்மானம் கோரியுள்ளது. (அ-எ)

இப்படி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

சங்கத்தின் அவசரக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

# ஒருவரின் உரிமையை இன்னொருவர் பறிக்க முடியாது

## உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து உரை

யாழ்ப்பாணம், நவ. 14

ஒரு மனிதனுக்குள்ள உரிமைகளை இன்னொருவரால் பறிக்கவோ, தடுக்கவோ முடியாது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு. ஆ. குணரத்தினம் இவ்வாறு கூறினார்.

நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

பலவந்தமாக உரிமைகள் பறிபோவதை நாம் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

பறிபோகாதபடி நாம் போராட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புப் பிரதிநிதி பேசுகையில், யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பிரதேச வேறுபாடு இன்றி ஒரு குடும்பமாகவே பழகி உறவாடி வருகிறார்கள்.

எம்மில் ஒருவருக்கு ஏற்பட்ட இன்னலை எமது குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட துன்பமாகவே நாம் கருதுகிறோம் என்றார். (இ-5)

## ஷெல் விழுந்தஇடங்களை பார்க்கச் சென்றவரும் பலி

பலாலி, நவ. 14

மதிய உணவுக்காக வீட்டில் காத்திருந்த எனது மூத்த மகன் தனது சிநேகிதனுடன் ஷெல் விழுந்த இடங்களைப் பார்த்துவரச் சென்றார்.

உணவு அருந்தியபின் செல்லுமாறு நான் மறித்தபோதும் சென்ற எனது மகனைப் பின்பு பிணமாகவே கண்டேன்.

அச்சுவேலி வடக்கில் ஷெல் தாக்குதலினால் மரணமான அந்தோனிப் பிள்ளை சயேந்திரனின் தாயாரான திருமதி சரஸ்வதி அந்தோனிப் பிள்ளை தனது தலையில் அடித்துக் கதறியவாறு மேற்கண்டவாறு கூறினார்.

மிகவும் வறிய நிலையில் இருக்கும் எனது குடும்பத்தையும், தனது நான்கு சகோதரிகளையும் நல்ல நிலைக்குக் கொண்டு வர வெளிநாடு செல்ல இருந்த எனது மகனை உடல் சிதறிய நிலையில் காணுவது போன்ற கொடுமை என்னைப் போல எந்த ஒரு தாய்க்கும் ஏற்படக் கூடாது.

இவ்வாறு அவர் தெரிவித்தார், (இ-119)

## நாளை எதிர்ப்புத் தினம்

### ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 14

நாளை 15 ஆம் திகதியை எதிர்ப்புத் தினமாக அனுஷ்டிக்கக்கோரி ஈரோஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:

இன்றைக்கு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை, ஸ்ரீலங்கா அரசு 1948 நவம்பர் 15 ஆம் திகதி மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்ததன் மூலமே தொடக்கி வைத்தது.

அதேவேளை நாடற்றவர் பிரச்சினையை தீர்த்துவிட்டதாக ஸ்ரீலங்கா அரசு கூறிவருகின்றது.

ஆனாலும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ந்தும் நாடற்றவர்களாகவே உள்ளனர். அத்துடன் வாக்குரிமை அளிப்பதன்மூலம் மட்டும் இம்மக்களின் பிரச்சினையை தீர்த்துவிட முடியாது மாறாக அவர்களது வாழ்க்கையில் அடிப்படையில் மாற்றம் காணப்படவேண்டும்.

இவ்வகையில் நாளை 15 ஆம் நாளை தமிழ் பேசும் மக்கள் எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிப்போம். எழுச்சிபெற்று வரும் மலையக மக்களின் போராட்ட உணர்வுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு, மலையகம் இணைந்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காக இதனை கடைப்பிடிப்போம்.

அந்நாளில் எதிர்ப்புக் காட்டும் வகையில் வெளிச் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி, எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி நம் உணர்வினை வெளிப்படுத்துவோம்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)

## எட்டிப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வந்த குடும்பம் ஒன்றின் தலைவர், குடும்பத்தவரை பாதுகாப்புக் கருதி, வளவுள் வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் இறக்கி விட்டார்.

அதன் பின்னர் குடும்பத் தலைவர் வெளியே நின்று சிப்பாய்களின் நடமாட்டம் பற்றி நோட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

முகாமில் நின்ற சிப்பாய்கள் இவரைக் கண்டுவிட்டனர் சைகை காட்டி அழைத்தனர்.

விசாரித்த பின்னர் பதுங்குகுழிக்குள் இருந்த குடும்ப உறுப்பினர்களையும்அழைத்துக் கொண்டு முகாமுக்கு வரும்படி கூறி அவரைசிப்பாய்கள் அனுப்பினர்.

குடும்பத்துடன் அவர் முகாமுக்குச் சென்றார். புதன் அதிகாலை 6 மணி அளவில் முகாமுக்குச் சென்ற அவர்கள் செய்தி எழுதும் வரை விடுவிக்கப்படவில்லை.(இ-எ-160)

## பாடசாலைத்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கா. கார்த்திகேசு விசேடசேவை அலுவலர் திரு. சோ. சச்சிதானந்தம், ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ம. தனபாலசிங்கம் ஆகியோருட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

ஈற்றில் தங்களுக்கு அளிக்கப் பெற்ற பாராட்டுபசாரத்திற்கு நன்றி தெரிவித்து திருமதி சி. நடராசா, திருமதி நா. மாணிக்கம், திரு. த. தவராசா ஆகியோர் உரையாற்றினர். (இ-131)

## ஆதரித்து அறிக்கை

யாழ்ப்பாணம், நவ, 14

யாழ் - பல்கலைக் கழக மாணவர்கள் நடத்தும் உண்ணாவிரதப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வெளிவாரிப் பட்டப் படிப்பு ஒன்றியம், கிராமியத் தொழிலாளர் சங்கம், வட்டுக் கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவை அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

நேற்றைய ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மாலை நான்கு மணியுடன் முடித்து வைக்கப்பட்டது (இ-10)

## தொழில். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் தொழில் நுட்பக் கல்லூரி வளவில் நடைபெறும் இந்த உண்ணாவிரதம் மாலை நான்கு மணிவரை நடைபெறும்.

இது சம்பந்தமாக யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் - இக் கடத்தலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என இயக்கங்கள் கை விரித்துள்ளன.

தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் இருப்பதாகக் கூறும் இயக்கங்கள் தனியே பத்திரிகைகளில் கண்டித்து அறிக்கை விடுவதுடன் மட்டும் நிற்காமல் காணமல் போன மாணவனைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## காங்கேசனில் மா, சீனி கப்பல்கள்

யாழ்ப்பாணம், நவ 14

1500 மெற்றிக் தொன் மாவுடனும், 900 மெற்றிக் தொன் சீனியுடனும் இரு கப்பல்கள் காங்கேசன்துறைமுகம் வந்து சேர்ந்தன.

கோதுமை மா மேலும் இருகப்பல்களில் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது (இ-5)

## வர்த்தகர்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஒரு சுமுகமான முடிவைக் காணும்படி இந்திய அரசாங்கத்தை யாழ் வர்த்தகர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-எ)

## பொலீஸ் ஊர்காவல்படை பாதுகாப்பு

திருகோணமலை, நவ 14

திருகோணமலை நகரில் உள்ள அரச கூட்டுத்தாபன அலுவலகங்களை தற்போது ஆயுதம் தரித்த பொலீஸ், ஊர்காவல்படையினர்காவல் புரிகின்றனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி இரவு திருமலை தொலைத் தொடர்புத் திணைக்களம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அரச, கூட்டுத்தாபனங்களின் அலுவலகங்களைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. (இ-எ-150)

## யாழ் நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும், பொது ஸ்தாபனங்களையும் தமிழீழ மக்கள் போராட்ட நடவடிக்கைக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசு, இந்திய மத்திய அரசு ஆகிய வற்றுக்கு எதிர்ப்புக் காட்டும் விதத்திலும் இந்த ஊர்வலம் நடக்கும் என்று போராட்டக் குழு முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நேற்று நடத்த ஏற்பாடாகி இருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் இன்றைய தினத்துக்கு ஒத்தி போடப்பட்டது [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மந்திகை---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இந்த அடையாள வெளி நடப்பில் கலந்து கொண்டனர்.

புதன்கிழமை 12 மணிமுதல் ஒரு மணி வரை நடைபெற்ற இவ் வெளிநடப்பின் பின்னர் தாக்குதலைக் கண்டித்து கூட்டம் நடத்தப் பட்டது.

யாழ். அரச அதிபர் ஊடாக இத் தாக்குதலுக்கு ஆட்சேபம் தெரிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (இ-118)

## வவுனியா---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

சுலோக அட்டைகளும் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் கண்டனக் கூட்டம் ஒன்றும் அங்கு நடைபெற்றது.

இதேவேளை விசுவமடுப் பகுதியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஒன்றும் முள்ளிவாய்க்கால் பகுதியில்இருந்து ஆரம்பமா மற்றொரு ஊர்வலமும் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தைச் சென்றடைந்தன.

சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள்,அரச ஊழியர்கள் இந்த ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். (இ-10)

## புத்தூர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் சேவையும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நெல்லியடி ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட சேவையாகவே நடத்தப்படுகின்றன.

வல்லைப்பாலம் தகர்க்கப்பட்டதை தொடர்ந்து [illegible] யாவும் ஸ்தம்பித்துள்ளன. (இ-70-118)

## சீபிளேன் வட்டமிட - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மணியுடன் மூடப்பட்டன.

பதற்றம் காரணமாக நெல்லியடிக் கடைகள், சந்தைகள் களைந்து பின் திறக்கப்பட்டன

இதற்கிடையில் நெல்லியடி, நவிண்டில், கரணவாய், வதிரி, மாலுசந்தி ஆகிய பகுதிகளில் புதன் கிழமை பகல் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்களில் நான்கு பேர் காயம் அடைந்தனர்.

இத் தாக்குதல்கள் இரண்டுமணி நேரம் நீடித்தன. தாக்குதல்களில் சுமார் 50 வீடுகள் சேதமடைந்தன. கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பகுதியிலும் தாக்குதல் நடத்தப்பட்டது.

கே. சின்னவன், கரவெட்டி (24 வயது)

கே. குலசிங்கம், கரவெட்டி (28 வயது)

எஸ். டயஸ், நெல்லியடி (23 வயது)

எம் சிறீபதி, வல்வெட்டித்துறை (21 வயது)

ஆகியோரே நெல்லியடிப் பகுதியில் நடந்த தாக்குதலில் காயமடைந்தவர்கள் ஆவர்.

இதேவேளை புதன் அதிகாலை தொடக்கம் தொண்டமானாறு முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் புருப்பொறுக்கி கல்லுவம், வல்லை, உடுப்பிட்டி பகுதிகளில்வீழ்ந்து வெடித்தன.

காலை 9-30 மணியளவில் குஞ்சர்கடை, புருப்பொறுக்கி, மண்டான், கல்லுவம் ஆகிய பகுதிகளில் ஹெலி தாக்குதலை நடத்தியது. (இ-70-160)

## வல்வை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர் புலிகளினால் தகர்க்கப்பட்ட தொண்டமானாறு பாலத்தை திருத்த கடந்த புதன் இரவு தொடக்கம் தொண்டமானாறு இராணுவத்தினர் அப்பகுதியில் நடமாடினர்.

இதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவத்தினரின் முயற்சிகளை முறியடிப்பதில் தீவிர முயற்சியில் நேற்று ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தொண்டமானாறு முகாமில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர். (அ-எ-160)

## ஈ. பி. ஆர். எல். ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கவில்லை.

அத்துடன் இந் நடவடிக்கைக்கான சரியான காரணங்களையும் முன் வைக்கவில்லை.

எது எப்படி இருந்த போதும் ஈழ மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதும், தொடர்ந்தும் சமாதான தீர்வுக்காக இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வரும் விடுதலை இயக்கங்களின் தலைவர்களையும் போராளிகளையும் கைது செய்தது ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

இச்செயல் முழுக்க முழுக்க ஈழ மக்களை ஒடுக்கிவரும் இலங்கை அரசுக்கு உடந்தையான தாகவே அமைந்துள்ளது.

இப்படி ஈ. பி. ஆர். எல். எப். விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முகாமிலிருந்து---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கடும்யுத்தம் நடத்தினர்.

நேற்று அதிகாலை தொண்டமானாறு பகுதியைச் சுற்றி இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தின. கடற்பகுதியில் இருந்து பீரங்கிப் படகு மூலம் மோட்டோ ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

எமது வீரர்களின் நேரடித் தாக்குதல்களை திசை திருப்பும் நோக்குடன் தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வெளியே வரமுயன்றனர்.

அவர்களை நோக்கியும் எம்மவர் கடும் தாக்குதல் நடத்தி வெளியே வராது தடுத்தனர்.

சிப்பாய்கள் தரப்பில் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

எமது தரப்பிலும் இரண்டு வீரர்கள் காயமடைந்தனர்.

### கடலில் இருந்து

கடற்பகுதியில் இருந்து கடற்படையினர். ஐந்து அங்குல மோட்டோ ஷெல், 40–எம் தாக்குதல்களை மேற் கொண்டனர். எனினும் எமது வீரர்கள் தொடர்ந்தும் மோதிக் கொண்டிருந்தனர்.

எமது தரப்பில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைச் சுற்றியுள்ள 150யார் தூரத்தில் இராணுவத்தினர் நடமாடித் திரிவதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (அ-10)

## வயோதிபப் பெண் மர்ம மரணம்

பலாலி, நவ. 14

தனது சம்பாத்தியங்கள் பற்றி வேறு பலருக்கு, முதல் நாள் அறிவித்திருந்த வயோதிபப் பெண் ஒருவர் மர்மமான முறையில் கிணற்றினுள் இறந்து கிடந்தார்.

இரவோடிரவாக சடலத்தை அடக்கம் செய்ய முயன்ற உறவினர் மீது சந்தேகமுற்ற அயலவர்கள் விடுதலை இயக்கமொன்றிற்கு அறிவித்தனராம்.

அவ்வியக்கம் அடக்கம் செய்யும் முயற்சியைத் தடுத்தது.

இறந்தவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டபின்பே அடக்கம் செய்யப்பட வேண்டுமென இயக்கம் தெரிவித்து சந்தேக நபரையும் தமது பாதுகாப்பில் வைத்தது.

அச்சுவேலியிலுள்ள ஊரியான் என்ற பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது. (இ-119)

## தமிழ் நாடு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திருத்த இந்திய மத்திய அரசு முன்வரவேண்டும், என்று தி மு. க உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் கொண்டு வந்த திருத்தத்துடன் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

(3 ஆம் பக்கமும் பார்க்க) (இ-எ)

## வர்த்தகர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 14

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமற்போனது அனைத்து முற்போக்குச் சக்திகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக யாழ் வர்த்தகர் சங்கம் கண்டனம் தெரிவித்திருக்கின்றது

இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் யாழ். வர்த்தகர் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:

இயக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ்ப்பாணத்தில் இது நடந்தது விசனத்துக்குரிய ஒன்றாகும். கடத்தப்பட்ட மாணவன் மனிதாபிமான அடிப்படையில் எதுவித நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்படவேண்டும் என்று சங்கம் சம்பந்தப்பட்டவர்களை கோருகிறது. (அ-எ)

## வேண்டுகோள்

வேலணை, நவ 14

பெரும்போக விவசாயச் செய்கையை முன்னிட்டு வேலணைப் பகுதியிலுள்ள கட்டாக்காலி கால் நடைகளை கட்டுப்படுத்தும் படி வேலணை கமநல சேவை நிலையம் கால் நடைச்சொந்தக்காரரைக் கேட்டுள்ளது. (இ-167)

# செய்திச் சாரம்

## இன்று மோதல்

யாழ்ப்பாணம், நவ. 14

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையேயான உதைபந்தாட்டப் போட்டி இன்று (வெள்ளி) பிற்பகல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ-எ)

## மீலாத் விழாவும் மௌலத்தும்

யாழ்ப்பாணம், நவ.14

எதிர்வரும் 15 ஆம், 16ஆம் திகதிகளில் யாழ் ஜும்மா மொஸ்க் லேன் பள்ளி வாசல் அருகில் அமைந்துள்ள பந்தலில் மிலாத் விழாவும் மௌலத்தும் நடைபெறும்,

இவ்விழாவில் சதீப்மார்கள், சன்மார்க்கப் பெரியோர்கள் உரை நிகழ்த்துவர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் யாழ்ப்பாணக் கிளை விழாவை ஒழுங்கு செய்துள்ளது. (இ-எ)

## கொக்குவில் இந்து பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ, 14

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இம்மாதம் 18 ம் திகதி பிற்பகல் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கலாநிதி சபா. ஜெயராசா கலந்துகொள்கிறார். (இ-எ)

## நள்ளிரவில் விழுந்த ஷெல்கள்

பலாலி, நவ. 14

புதன்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இருந்து தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட 7 ஷெல்கள் அச்சுவேலிப் பகுதியில் உள்ள தம்பாலை, வண்ணகிராய் குறிச்சிகளில் விழுந்து வெடித்தன.

நள்ளிரவில் பயங்கரச் சத்தத்துடன் வெடித்த இந்த ஷெல்களின் அதிர்வினால் இரவோடிரவாக சிலர் இடம் பெயர்ந்தனர். (இ-119)

## மீண்டும் நிலாவெளி பஸ்சேவை

திருகோணமலை, நவ.14

இம்மாதம் 7ஆம் திகதி முதல் திருகோணமலை நகரில் இருந்து நிலாவெளிக் கிராமத்துக்கு பஸ்சேவை நடைபெறுகிறது

சாம்பல்தீவுக் கிராமம் வரை இடம்பெற்று வந்த பஸ் சேவை, நிலாவெளி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-எ-150)

## போராளிகள் பாலத்தை திருத்துகின்றனர்

வல்வெட்டித்துறை, நவ. 14

இராணுவச் சிப்பாய்களினால் கடந்த புதன் கிழமை குண்டு வைத்து தகர்க்கப்பட்ட வல்லைப் பாலம் போராளிகளினால் புனரமைக்கப்படுவதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன.

விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் நேற்றுக் காலையில் இருந்து இப்பாலத்தை புனரமைக்கும் வேலைகளில் போராளிகள் ஈடுபட்டு வந்தனர் என்று அச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ-160)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 14 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org